பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 14 புதன்கிழமை 30.07.2025 கதிர் 263

## இனி இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் சொத்துக் குவிப்புத் தொடர்பில் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்தவர் செய்தியாளர்கள் ☞ 2

## அநுரவின் பயணங்களால் என்ன பயன்? இந்திய ஒப்பந்தங்களை மறைப்பது ஏன்?

### கேட்கிறார் ஐக்கிய மக்கள் சக்தி தேசிய அமைப்பாளர்

அரசுத் தலைவர் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு பயணங்களால் நாட்டுக்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் மற்றும் அந்த நாடுகளுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் ஆளும்தரப்பு நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும். இந்தியாவுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களை இதுவரை வெளிப்படுத்தாமல் இருப்பது பெரும் பிரச்சினையாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் அநுரகுமார ☞ 2

## மோல்டாவாவில் அநுரவின் முதலீடு தொடர்பான தகவல் முழுப் பொய்

### நீதிமன்றில் ஒப்புக்கொண்ட திஸ்ஸ குட்டியாராச்சி

அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க மோல்டாவா நாட்டில் 5 பில்லியன் டொலர் நிதி முதலீடு செய்துள்ளார் என்று தான் குறிப்பிட்டது முற்றிலும் பொய் என்று பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியராட்சி நீதிவான் முன்னிலையில் நேற்று ஒப்புக்கொண்டார். அடிப்படையற்றவகையில் பொய்யுரைத்ததற்கு கவலையும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியராட்சிக்கு எதிராக அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க தாக்கல் செய்த அவதூறு வழக்கு நேற்று கொழும்பு ☞ 3

## நல்லூரில் வீதி தடைகளை மீறிய இராணுவ வாகனத்தால் பரபரப்பு



நல்லூர் ஆலய வீதித் தடைகளை மீறி ஆலய வளாகத்தினுள் இராணுவத்தினரின் ‘கப்’ ரக வாகனம் நுழைந்தமையால் ஆலய வீதியில் சிறிதுநேரம் பரபரப்பு ஏற்பட்டது.

நல்லூர் ஆலய வருடாந்திர மகோற்சவம் நேற்றுக்காலை10மணிக்குகொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஆலய மகோற்சவ திருவிழாக்களை முன்னிட்டு , திங்கட்கிழமை முதல் ☞ 3

## புதிய அரசமைப்பு உருவாக்கம் வெறும் கானல் நீர் மட்டுமே

### முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ஆரூடம்

புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் ஊடாகவே நாட்டில் புரையோடியுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக ஆளும்தரப்பு எடுத்துள்ள நடவடிக்கைகளை தெளிவுப்படுத்த வேண்டும். இந்த ஆளும்தரப்பு புதிய அரசமைப்பொன்றை உருவாக்கும் என்பது வெறும் கானல் நீரானது என முன்னாள் நீதி மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அரசுத் தலைவர் சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றி அவரிடம் வினவியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக நல்லாட்சி ஆளும்தரப்பு மேற்கொண்ட நடவடிக்கைகளைத் துரிதமாக நிறைவு செய்து புதிய அரசமைப்பினை இயற்றுவதாக தேசிய மக்கள் சக்தி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தது.

நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு புதிய அரசமைப்பு ☞ 2

### புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூடாக

## ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் அரச தலைவருக்கு வழங்கப்படக்கூடாது

### அம்பிகா சற்குணநாதன் வலியுறுத்து

புதிதாக உருவாக்கப்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் நீதிமன்றத்தின் அல்லது நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தல், சில இடங்களை தடைசெய்யப்பட்ட பகுதிகளாக வரையறுத்து மக்கள் நடமாட்டத்தை மட்டுப்படுத்தல் போன்ற அறிவிப்புக்களை வெளியிடுவதற்கான அதிகாரம் அரசுத் தலைவர்க்கு வழங்கப்படக்கூடாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும், சித்திரவதைகளைத் தடுப்பதற்கான ஐ.நா முகவரகத்தின் உறுப்பினருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்யும் வகையில் புதியதொரு பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைபைத் தயாரிப்பதற்கு அவசியமான பரிந்துரைகளை முன்வைக்குமாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு அண்மையில் வேண்டுகோள்விடுத்திருந்தது. அதற்கமைய அம்பிகா சற்குணநாதனால் நீதியமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் அடங்கிய கடிதத்தில் ☞ 2

## தேசபந்து தென்னக்கோன் முன் பிணை கேட்டு மனு

தாம் கைது செய்யப்படுவதை தடுக்கக் கோரி, இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் சார்பாக சட்டத்தரணி அஜித் பத்திரண தாக்கல் செய்த முன்பிணை மனுவை ஒகஸ்ட் மாதம் 5 பரிசீலனைக்கு அழைக்குமாறு கோட்டை நீதிவான் நிலுபுலி லங்காபுர உத்தரவிட்டார்.

அந்தத்திகதியில் நீதிமன்றத்தில் ☞ 3

## நேற்றும் 7 எலும்புக்கூடுகள் செம்மணியில் அடையாளம்





யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழி அமைந்துள்ள பகுதியில் தற்போது தோண்டப்பட்டுவரும் அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானத்திலிருந்து நேற்றும் புதிதாக 07 எலும்பு கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டு தொகுதிகளில் 3 முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் கடந்த 9 நாட்களாக இடம்பெற்றுவரும் அகழ்வுப் பணியில், 34 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி பகுதியில் ’தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல-01’ மற்றும் ’தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02’ என ☞ 2

## நீதிமன்றக் கட்டமைப்பை அரசியல்மயப்படுத்த ஆளும்தரப்பு முயற்சி என நாமல் குற்றச்சாட்டு

அரச சொத்துக்களை நாங்கள் முறைகேடாக பயன்படுத்தவுமில்லை, மோசடி செய்யவுமில்லை. நீதிமன்ற கட்டமைப்பை அரசியல்மயப்படுத்த ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. நீதித்துறையின் மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. எமது தரப்பு நியாயத்தை குறிப்பிட்டு நீதியை பெற்றுக்கொள்வோம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை நீதிவான்மன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு நேற்று முன்னிலையாகிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது ☞ 3

## பொலிஸ் கான்ஸ்டபிள் வீட்டில் போதை மாத்திரைக் களஞ்சியம்

### மூன்று பேர் கைது

கொஹுவல பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவில் பணியாற்றும் கான்ஸ்டபிள் ஒருவர், அவரது வீட்டில் போதை மாத்திரைக் களஞ்சியம் ஒன்றை பராமரித்து, நாடு முழுவதும் விநியோகித்து வந்ததாகக் கூறப்படும் சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். அவரது மனைவி மற்றும் மருந்தக உரிமையாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 20 மில்லியன் ரூபாய் ☞ 2

## விடத்தல்தீவு இறால் பண்ணைகளுக்கான வர்த்தமானியை திரும்பப்பெறத் தீர்மானம்

வில்பத்து பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள விடத்தல்தீவு வனப்பகுதி வலயத்தில் 168 ஹெக்டேர் நிலத்தை இறால் பண்ணையை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சந்திப்பில் சொன்ன விவரங்களை இன்று உங்களுடன் பகிர்ந்துகொள்வதாக நேற்றே தெரிவித்திருந்தேன்.

தனது முறைப்பாட்டைத் தொடர்ந்துத நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தமிழ் ஊடகங்கள் சில பலவிற்கு வழங்கிய நேர்காணல்களைக் கேட்டுவிட்டே அவர் இந்தச்செய்தியாளர் சந்திப்பை நடத்தியுள்ளார். அவரது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்த ஞானம் ஐஸ்கிறீம் கடைகள் மற்றும் தாரணி 'சுப்பர் மார்க்கெட்' என்பன தன்னுடையவை அல்லவென்றும் அவை வேறு தனி நபர்களின் பெயர்களில் உள்ள வியாபார நிலையங்கள் என்றும் சிறீதரன் தரப்பில் விளக்கமளிக்கப்பட்டிருந்தது. அது தவிர மதுபான நிலையத்திற்கான அனுமதிப் பத்திரத்தைத் தான் வாங்கியிருந்தார் என்றால் அதனையும் நிரூபிக்கும்படியும் சிறீதரன் சவால் விடுத்திருந்தார்.

இது குறித்து பதில் விளக்கமளித்துள்ள முறைப்பாட்டாளர். இந்தவர்த்தகநிலையங்கள் மற்றும் மதுபான நிலையங்கள் வேறு நபர்களின் பெயர்களில்தான் இயங்கி வருகின்றன என்பது தனக்குத் தெரியும் என்றும், அந்த விவரங்களோடுதான் தான் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாட்டைச் செய்துள்ளார் என்றும் ஆனாலும் இவை அனைத்தும் சிறீதரனின் சொத்துக்களே என்பதால்தான் அது குறித்து விசாரிக்கும்படி முறைப்பாடு செய்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். சிறீதரனுக்கு கொழும்பில் காணிகள் எப்படிக் கிடைத்தன என்பது தொடர்பிலும் முக்கியமாக விசாரிக்கப்படவேண்டியிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

மதுபான நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து அரசியல் இலஞ்சமாகச் சிறீதரன் பெற்றார் என்றும், அவை 20 கோடி ரூபாய் பெறுமதியானவை என்றும் அவர் தெரிவித்தார். ரணிலிடம் இருந்து மதுபான நிலைய அனுமதிப் பத்திரத்தைப் பெற்றமை அரசியல் இலஞ்சம் என்ற வகையில் இலஞ்ச, ஊழல் குறித்த குற்றச்சாட்-டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிலும் தான் சிறீதரனுக்கு எதிராக முறைப்பாடு செய்யவுள்ளார் என்றும் அவர் தெரிவிக்கிறார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தமது கட்சிக்குள்ளேயே தன்னோடு- சேர்ந்து இயங்குவார் என்று உறுதியளித்த ஒரு நபரே இந்த முறைப்பாடுகளின் பின்னால் நின்று இயக்குகிறார் என்று சிறீதரன் தெரிவித்திருந்த குற்றச்சாட்டுக்கும் முறைப்பாட்டாளர் பதிலளித்துள்ளார். தான் முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, கெஹலிய ரம்புக்வெல ஆகியோருக்கு எதிராகவும் முறைப்பாடுகளைச் செய்தவர் என்றும், ரணிலின் ஆட்சிக் காலத்தில் ஆளும்தரப்பே எதிர்த்து நின்றபோதும் கெஹலியவுக்கு எதிராக முறைப்பாட்டைச் செய்யும் துணிச்சல் தனக்கு இருந்தது என்றும் அப்படிப்பட்ட தன்னை யாரோ தூண்டிவிட்டு சிறீதரனுக்கு எதிராக முறைப்பாடு செய்ய வைத்துள்ளார்கள் என்று கூறுவது அபத்தம் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இப்படி சால்ஜாப்புக் கதைகளைக் கூறுவதை விடுத்து சிறீதரன், நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்குச் சென்று வாக்குமூலம் வழங்கவேண்டும் அல்லது தனக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் சவால் விடுத்தார். தான் தமிழர்களுக்கு (திராவிட) எதிரானவர் அல்லர் என்றபோதும் வடக்கிலும் அரசியல்வாதிகள் ஊழல் மிக்கவர்களாக இருக்கின்றனர் என்பதாலேயே தான் முறைப்பாட்டைச் செய்தார் என்றும் இன்னும் பலருக்கு எதிராகத் தான் முறைப்பாடுகளைச் செய்யவுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கிணறுவெட்டப்பூதம் கிளம்பிய கதையாக இன்னும் யார் யாரின் வண்டவாளங்கள் எல்லாம் கிளறப்படப் போகின்றனவோ தெரியவில்லை..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாகத் தீர்வு காணவேண்டும் என்பதை அடிப்படையாகக்கொண்டு நல்லாட்சிக்காலத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுத்தோம்.

புதிய அரசமைப்பு தொடர்பான யோசனைகளுக்கு அப்போதைய பிரதான எதிர்க்கட்சியாக இருந்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்தியது. 2018ஆம் ஆண்டு அரசமைப்புக்கு முரணாக ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் புதிய அரசமைப்புக்கான பணிகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன.

2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டபய ராஜபக்ச ஆளும்தரப்பு புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான எவ்விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. இதனால் தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான திட்டங்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டன.

தேசிய மக்கள் சக்தி பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியே ஆட்சிக்கு வந்தது. குறுகிய காலத்தில் புதிய அரசமைப்பை உருவாக்குவதாக குறிப்பிட்டது. ஆனால் தற்போது பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டதன் பின்னர் புதிய அரசமைப்பினை உருவாக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று ஆளும்தரப்புக் குறிப்பிடுகிறது.

பொருளாதார வளர்ச்சி 2026 ஆம் ஆண்டு முதல் வீழ்ச்சியடைந்த நிலைக்கு செல்லும் என்று பொருளாதார நிபுணர்கள் எதிர்வுகூறியுள்ள நிலையில் புதிய அரசமைப்பு உருவாக்கம் என்பது வெறும் கானல்நீராகவே அமையும். யாப்புருவாக்கத்துக்கு இந்த ஆளும்தரப்பு இதுவரையில் ஆரம்பக்கட்ட பணிகளைக்கூட முன்னெடுக்கவில்லை என்றார்.

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்புள்ள போதை மாத்திரைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பொரலஸ்கமுவ, பெல்லன்வில, ஜய மாவத்தைப் பகுதியில் தற்காலிகமாக வசிக்கும் இந்தக் கான்ஸ்டபிளின் வீட்டில், 150 மி.கி. போதை மாத்திரைகள் கொண்ட 21 பெட்டிகள் மற்றும் 300 மி.கி. போதை மாத்திரைகள் கொண்ட ஒரு பெட்டி என மொத்தம் 1,330,420 மாத்திரைகள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

மன்னார் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு இராணுவ புலனாய்வுப் பிரிவு வழங்கிய தகவலின் அடிப்படையில், இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

விசாரணைகளில், 14 ஆண்டுகளாக கொஹுவல பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வரும் இந்தக் கான்ஸ்டபிள், மருந்தக உரிமையாளரால் வழங்கப்பட்ட போதை மாத்திரைகளை தனது வீட்டில் களஞ்சியப்படுத்தி, நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு விநியோகித்து வந்தது தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரும், போதைப்பொருள் வைத்திருத்தல், கடத்தல், மற்றும் குற்றத்திற்கு உதவி செய்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கான்ஸ்டபிளும் அவரது மனைவியும் 35 வயதுடையவர்கள், மருந்தக உரிமையாளர் 49 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் குற்றப் புலனாய்வுப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## ஊரடங்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் அடங்கியுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

**பயங்கரவாதம் எனும் பதத்துக்கான வரைவிலக்கணம்**

சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டத்தின் 9 ஆவது பிரிவானது குறித்தவொரு நபரைக் கைதுசெய்வதற்கோ அல்லது தடுத்துவைப்பதற்கோ சட்டத்தின் ஊடாக வரையறுக்கப்பட்ட நியாயமான காரணம் இருக்கவேண்டும் எனவும், அவ்வரையறையானது மிகத்தெளிவாக போதிய விளக்கத்தைத் தரக்கூடியவகையில் அமையவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றது. குறித்தவொரு குற்றத்துக்கு பரந்துபட்ட அல்லது தன்னிச்சையான வரைவிலக்கணம் வழங்கப்படுவதையும், அதன் தன்னிச்சையான பிரயோகத்தைத் தடுப்பதுமே இதன் பிரதான நோக்கமாகும்.

உயிரிழப்பையோ அல்லது படுகாயத்தையோ ஏற்படுத்தும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள், அரச பயங்கரவாதத்தைத்தூண்டுதல், குறித்தவொரு சமூகப் பிரிவினரையும் ஒடுக்குதல் அல்லது அத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுமாறு ஆளும்தரப்பையோ அல்லது சர்வதேச அமைப்பொன்றையோ கட்டாயப்படுத்தல் ஆகிய நோக்கங்களுடன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், சர்வதேச பிரகடனங்களில் பயங்கரவாதம் எனும் பதத்துக்கு வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணத்துக்கு உட்பட்ட நடவடிக்கைகள் ஆகிய மூன்று விடயங்களும் 'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்கான வரைவிலக்கணத்தில் நிச்சயமாக உள்வாங்கப்படவேண்டும். அத்தோடு அவ்வரைவிலக்கணமானது குறிப்பானதாகவும், உரிய சட்டக்கோட்பாடுகளுக்கு உட்பட்டதாகவும் அமையவேண்டும்.

அதேவேளை இவ்வரைவிலக்கணம் 'தேசிய, இன மற்றும் மத வெறுப்புணர்வு' அல்லது 'ஒடுக்குமுறை வன்முறை' அல்லது 'அத்தியாவசிய சேவை வழங்கலுக்கான இடையூறு' போன்ற பரந்துபட்ட விளக்கத்தை உள்ளடக்கியிருக்கக்கூடாது. முன்னைய அரசாங்கங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைபுகளில் இவ்வாறான பதங்கள் உள்வாங்கப்பட்டிருந்தன. இவை கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரத்தை முடக்குவதற்கும், தொழிற்சங்க நடவடிக்கை போன்ற சட்ட ரீதியான சிவில் சுதந்திரத்தை ஒடுக்குவதற்கும் பயன்படுத்தப்படக்கூடும்.

**சட்ட அமுலாக்கத்தில் இராணுவமயமாக்கல்**

பயங்கரவாதக்குற்றங்களுக்காக நபர்களைக் கைதுசெய்வதற்கோ அல்லது குற்றத்தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கோ இராணுவத்தினருக்கு அதிகாரம் அளிக்கும் வகையிலான சரத்துக்கள் புதிய வரைபில் உள்வாங்கப்படக்கூடாது.

**பொலிஸ் காவல்**

கைதுசெய்யப்பட்டு பொலிஸ்காவலின் கீழ் வைக்கப்பட்டிருக்கும் நபர், கைதுசெய்யப்பட்டு 48 மணி நேரத்துக்குள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவேண்டும்.

**சட்ட உதவி மற்றும் குடும்பத்தாருடனான தொடர்பாடல்**

பயங்கரவாதக்குற்றத்துக்காக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் நபரின் சட்ட உதவியை நாடுவதற்கான உரிமை கட்டாயம் உறுதிசெய்யப்படவேண்டும். ஏனெனில் கைதுசெய்யப்பட்ட நபரின் அறியாமையைப் பயன்படுத்தி, அவரிடம் சட்டத்துக்கு முரணான வகையில் பொய்யான வாக்குமூலத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு உண்டு.

அத்தோடு கைதுசெய்யப்பட்ட நபர் அவரது குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்புகொள்வதற்கும், குடும்பத்தினர் தமது உறவினர் எங்கு தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார் என்பது பற்றி அறிந்துகொள்வதற்கும் இடமளிக்கப்படவேண்டும்.

**தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவரை பார்வையிடல்**

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள நபரை குறைந்தபட்சம் வாரத்துக்கு ஒருமுறையேனும் முன்கூட்டிய அறிவிப்பின்றி நீதிவான் சென்று பார்வையிடல் மற்றும் கண்காணித்தல் எனும் சரத்தின் செயற்திறனை வலுப்படுத்தக்கூடிய விடயங்கள் புதிதாக உருவாக்கப்படக்கூடிய சட்டத்தில் உள்வாங்கப்படவேண்டும்.

**அரசுத் தலைவருக்கான மட்டுமீறிய அதிகாரங்கள்**

புதிதாக உருவாக்கப்படும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைபில் நீதிமன்ற அல்லது நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தல், சில இடங்களை தடைசெய்யப்பட்ட பகுதிகளாக வரையறுத்து மக்கள் நடமாட்டத்தை மட்டுப்படுத்தல் போன்ற அறிவிப்புக்களை வெளியிடுவதற்கான அதிகாரம் அரசுத் தலைவர்க்கு வழங்கப்படக்கூடாது என்றுள்ளது.

## நேற்றும் 7....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் தொடர்ந்து அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்டப் பணிகளுக்காக 45 நாட்கள் நீதிமன்றினால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரையில் கட்டம் கட்டமாக 33 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதுவரையில் 111 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் மேலும் புதைகுழிகள் இருப்பதைக் கண்டறியக்கூடிய வகையில் நிலத்தை ஊடுருவும் ஸ்கானர் கருவி மூலம் ஆய்வுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

செம்மணி மனிதப் புதைகுழியை இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் சிறிவோல்ட் மற்றும் சுவிஸ் தூதரக அரசியல் பிரதிநிதி உள்ளிட்ட குழுவினர் நேற்றுக் காலை நேரில் பார்வையிட்டனர்.

சுமார் 45 நிமிடங்கள் வரை செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளை அவர்கள் பார்வையிட்டதோடு, அகழ்வுப் பணிகளில் ஈடுபடும் நிபுணர்களுடனும் கலந்துரையாடினர்.

## விடத்தல்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பராமரிப்பதற்காக விடுவிப்பதற்காக முந்தைய ஆளும்தரப்பின் முன்னாள் வனவிலங்கு அமைச்சர் பவித்ராவன்னியாராச்சி வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பை அமைச்சரவை திரும்பப் பெற முடிவு செய்துள்ளதாக சட்டமா அதிபர் இன்று உயர்நீதிமன்றத்தில் அறிவித்தார்.

குறித்த வர்த்தமானி அறிவிப்பை வலுவற்றதாக்கி உத்தரவிடக் கோரி வனவிலங்கு பாதுகாப்பு சங்கம் மற்றும் சுற்றுச்சூழல் நீதி மையம் தாக்கல் செய்த இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் இன்று உயர் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்ட போதே இது அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விவேகா சிறிவர்தன இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதியரசர்களான எஸ். துரை ராஜா, யசந்த கோதாகொட மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விவேகா சிறிவர்தன, மீளாய்வு செய்த பிறகு வர்த்தமானி அறிவிப்பை திரும்பப் பெற அமைச்சரவை முடிவு எடுத்துள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதன்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான அரசுத் தலைவர் சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, குறித்த வர்த்தமானி அறிவிப்பை திரும்பப் பெற்றதில் மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார்.

இருப்பினும், வனவிலங்கு மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவிப்பை திரும்பப் பெற்றதாக அறிவிக்குமாறு அரசுத் தலைவர் சட்டத்தரணி நீதிமன்றத்தைக் கோரினார்.

பிரதிவாதிகள் அதற்கேற்ப செயல்படத் தயாராக உள்ளனர் என்ற நீதிமன்றத்தில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இணக்கம் வெள யிட்டார்.

பின்னர், அந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து விசாரிக்க குறித்த மனுவை ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி திரும்பப் அழைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

## அநுரவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திசநாயக்க பதவிக்கு வந்து 10 மாதங்களில் 6 நாடுகளுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ளார். அவரின் வெளிநாட்டு பயணங்களால் நாட்டுக்கு நன்மை கிடைப்பதாக இருந்தால், அதுதொடர்பில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் அரசுத் தலைவரின் வெளிநாட்டு பயணங்கள் தொடர்பில் எமக்கு அறியக்கிடைப்பது, அங்கு அவருக்கு அமோக வரவேற்பு, தலைவர்களுடன் கலந்துரையாப்பட்டது, ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்பட்டன. அவர் நாடு திரும்பினார் என்ற செய்திகளே தவிர, அந்த பயணத்தால் நாட்டுக்கு கிடைத்த நன்மை தொடர்பில் எந்த தகவலும் இல்லை.

நாங்கள் நாடு என்றவகையில் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்து வருகிறோம். இந்நிலையில், சர்வதேச நாடுகளுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு, பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கிறது. 2028ஆம் ஆண்டில் இருந்து எமது கடன்களை மீள செலுத்த வேண்டி இருக்கிறது. அதனால் அரசுத் தலைவரின் வெளிநாட்டுப் பயணங்கள் நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடியதாக

தொடர்ச்சி 3ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

## அநுரவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கவேண்டும்.

அவ்வாறான எதனையும் எங்களால் காணக்கூடியதாக இல்லை. குறைந்தபட்சம் அரசுத் தலைவர் வெளிநாடுகளுக்குச் சென்று, அங்குள்ள தலைவர்களுடன் மேற்கொள்ளும் கலந்துரையாடல்கள், செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும். அவ்வாறு எதுவும் இடம்பெறுவதில்லை.

இந்தியாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. இது பெரும் பிரச்சினையாகும். அதனால் இந்தியா உள்ளிட்ட அரசுத் தலைவரின் வெளிநாட்டு பயணங்களின்போது, அவர் அந்த நாட்டு தலைவர்களுடன் கலந்துரையாடிய விடயங்கள், செய்துகொண்ட ஒப்பந்தங்கள் மற்றும் அந்த பயணங்களால் நாட்டுக்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் தொடர்பில் ஆளும்தரப்பு நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

2002 ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க பிரதமராகஇருந்தகாலத்தில்,வெளிநாடுகளுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளும் அமைச்சர்கள், நாடு திரும்பிய பின்னர், அந்த பயணத்தால் நாட்டுக்கு கிடைத்த நன்மைகள் தொடர்பில் அமைச்சரவைக்கும் நாடாளுமன்றத்துக்கும் தெரிவிக்கவேண்டும் என்பதைக் கொள்கையாக்கக கடைப்பிடித்து வந்தோம்.

ஜேவிபி எதிர்க்கட்சியில் இருக்கும்போது, அரசுத் தலைவர் உத்தியோகபூர்வ வெளிநாட்டுப்பயணங்களைமேற்கொண்டால், அது தொடர்பான விடயங்களை அவர் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் என்றே தெரிவித்து வந்தது. ஆனால் தற்போது அவர்கள் அனைத்தையும் மறைத்து வருகிறார்கள். அரசுத்தலைவரின் வெளிநாட்டு பயணங்கள் வெறுமனே சுற்றுலா சென்று வருவது போன்றே அமைந்திருக்கிறது என்றார்.

## தேசபந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்படுமாறு விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு கோட்டை நீதிவான் நிலுபுலி லங்காபுர அழைப்பாணை விடுத்தார்.

அத்துடன் முன்பிணை மனுவுக்கு ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அன்று அதனைத் தாக்கல் செய்யுமாறும் நீதிவான், பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

அரகலய போராட்டம் நடந்த நேரத்தில் அரசுத் தலைவர் செயலகம் தொடர்பான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அந்த சம்பவம் தொடர்பாக தம்மை கைது செய்யத் தயாராக இருப்பதாகக் கூறி, இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் முன்பிணை மனுவை தாக்கல் செய்தபோது நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

## நல்லூரில் வீதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்தைச் சுற்றியுள்ள வீதிகள் போக்குவத்திற்குத் தடை செய்யப்பட்டுள்ளன. ஒகஸ்ட் மாதம் 24 வரையில் இந்த தடை நடைமுறையில் இருக்கும்.

இந்நிலையில் , கொடியேற்ற திருவிழா நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை நேற்று, ஆலய சுற்று வீதிகளில் உள்ள வீதி தடைகளை தாண்டி இராணுவத்தினர் கப் ரக வாகனத்தில் ஆலய முன் வீதி வரையில் பிரவேசித்துள்ளனர்.

வீதி தடைகளில், பொலிஸார் , யாழ் . மாநகர சபை உத்தியோகஸ்தர்கள் , தனியார் பாதுகாப்பு சேவை உத்தியோகஸ்தர்கள் என்போர் கடமையில் இருக்கும் போது, அவர்களின் அறிவுறுத்தல்களையும் மீறி இராணுவத்தினர் அடாத்தாக ஆலய வீதிக்குள் உட்பிரவேசித்தமை ஆலயத்தில் கூடியிருந்த பக்தர்களுக்கு இடையில் கடும் விசனத்தை

## நீதிமன்றக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். வழக்கு விசாரணை ஒன்றில் நாமல் நீதிமன்றுக்கு வரத்தவறியதன் காரணமாக அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. வழக்கு நாளில் மாலைதீவுகளில் இருந்த காரணத்தால் வழக்குக்கு வரமுடியவில்லை என்று தெரிவித்து, அங்கிருந்து திரும்பியதும் நேற்று நீதிமன்றில் முற்பட்டிருந்தார் நாமல். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குவதற்கு நல்லாட்சி ஆளும்தரப்புஎடுத்ததீர்மானங்களுக்குஎதிர்ப்பு தெரிவித்து வீதியில் இறங்கி போராடினோம். எம்முடன் ஜேவிபியினரும் அன்று வீதியில் இறங்கிப் போராடினார்கள்.

இந்தப்போராட்டத்தின்போதுநாங்கள்கைது செய்யப்பட்டு சிறைக்குச் சென்றோம். அந்த வழக்கு விசாரணைக்கு முன்னிலையாகாத காரணத்தால்தான் அம்பாந்தோட்டைநீதிவான் மன்றம் என்னைக் கைது செய்வதற்கு நேற்று (நேற்று முன்தினம்) பிடியாணை பிறப்பித்தது.இன்று (நேற்று) நீதிமன்றத்தின் முன்னிலையாகி அந்தப் பிடியாணையை நீக்கிக் கொண்டேன்.

நீதிமன்ற கட்டமைப்பை அரசியல்மயப்படுத்த இந்த ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. எம்மைக் கைது செய்வதால் நடைமுறையில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது.

போராட்டங்களினால் நாட்டை அபிவிருத்தியடைய செய்ய முடியாது என்று அரசுத் தலைவர் குறிப்பிடுகிறார். கடந்த 75 ஆண்டுகாலமாக யார் போராட்டங்கள் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டது? ஜேவிபி கடந்த 75 வருட காலமாக ஆட்சியில் இருந்த சகல ஆளும்தரப்புக்கள் முன்னெடுத்த அபிவிருத்திக்கும் எதிராகவே போராடியது. அன்று போராடியது.இன்று ஏதும் தெரியாமல் தள்ளாடுகிறது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துடன் இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து ஓராண்டு நிறைவடைகின்றது. இதுவரையில் தொழிற்றுறையை விருத்தி செய்யும் எவ்வித திட்டங்களும் செயற்படுத்தப்படவில்லை. இவ்வாறான நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் இலக்கிடப்பட்ட பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு அடைய முடியும் என்றார்.

## மோல்டாவாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே தான் சொன்னது பொய் என்று அவர் ஒப்புக்கொண்டார்.

நேற்றைய வழக்கு விசாரணை தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

2023. ஒக்டோபர் மாத காலப் பகுதியில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரான திஸ்ஸ குட்டியாட்சி தற்போதைய அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க மீது போலியான பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார். 'மக்கள் விடுதலை முன்னணியின் வங்கி கணக்குக்கு வெளிநாடுகளில் இருந்து பல பில்லியன் டொலர் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும், வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற 5 பில்லியன் டொலரை தற்போதைய அரசுத் தலைவர் அநுரகுமார மோல்டாவா நாட்டில் முதலீடு செய்துள்ளார் என்றும் திஸ்ஸ குட்டியராட்சி குற்றச்சாட்டியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கு எதிராக அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க 2023.10.13 அன்று அவதூறு வழக்குத் தாக்கல் செய்தார். இந்த வழக்கு இன்று (நேற்று ) நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது தான் பொய்யுரைத்தார் என்று திஸ்ஸ குட்டியராட்சி நீதிவான் முன்னிலையில் குறிப்பிட்டு கவலை தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசத்துக்கு எதிராகவும் அவதூறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆளும்தரப்பு மீது போலியான குற்றச் சாட்டுக்களைமுன்வைப்பதைஎதிர்க்கட்சியினர் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நீதிமன்றத்தின் ஊடாக தீர்வு காண்போம் என்றார்.

# பஸ் கட்டணத்தை சிறிது குறைப்பதற்கு தீர்மானம்

*பஸ் கட்டணத்தை 0.55 சதவீதத்தால் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.*

*பஸ் கட்டண திருத்த சட்டத்தின்படி, பஸ் கட்டணத்தை 2.5 சதவீதத்தால் குறைப்பதற்கு தீர்மானித்திருந்த போதிலும் திங்கட்கிழமை (30) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலை அதிகரித்ததன் காரணமாக பஸ் கட்டணத்தை 0.55 சதவீதத்தால் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.*

*அதன்படி, ஜூலை 04 நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பஸ் கட்டணம் 0.55 சதவீதத்தால் குறைக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.*

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இந்தியாவின் தார்மீகப் பொறுப்பு

**இலங்கை – இந்தியா இடையிலான 1987 ஆம் ஆண்டு ’இந்திய – இலங்கை உடன்படிக்கை’ (Indo- Lanka Accord) செய்துகொள்ளப்பட்டது. இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான மிக முக்கியமான அரசியல், பாதுகாப்பு ஒப்பந்தமான இது, இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய இடைக்கால முயற்சியாகவும் நோக்கப்படுகிறது. நேற்று (ஜுலை 29) இவ்வுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட 38ஆவது ஆண்டுகள் நிறைவுற்றுள்ளது. இருப்பினும், இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட முக்கியமான விடயங்கள் அனைத்தும் இன்னும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமலேயே இருக்கின்றன. இது மிகுந்த கவலையையும், கேள்வியையும் ஏற்படுத்துகிறது. இந்தியா இலங்கையுடன் மீண்டும் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தை (இரகசியமாக) செய்துகொண்டுள்ள நிலையில் இந்த உடன்படிக்கையின் அர்த்தம் என்னவென்பதும் இன்று பெரும் கேள்விக்குரியதாக இருக்கின்றது.**

**இந்நிலையில், இந்தியா தன்னுடைய தார்மீகப் பொறுப்பையும், அரசியல் உறுதி மொழியையும் மீறுவதாகவே காணப்படுகிறது. குறிப்பாகத் தமிழருக்கு வழங்கப்பட்ட அரசியல் அதிகாரப் பகிர்வு (devolution of power) தொடர்பான 13ஆவது திருத்தம் (13மிஜு புதுளஜ–துளஜமி), இந்த ஒப்பந்தத்தின் விளைவாக உருவான முக்கியமான பகுதியாகும். இதன் அடிப்படையில் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்க வேண்டிய தேவை இருந்தாலும், அதன் மூ–லம் மாகாணங்களுக்கு வழங்கப்படவேண்டிய பொலிஸ், நிலம் போன்ற முக்கிய துறைகள் இன்னும் கொழும்பு அரசின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றன.**

**இந்த உடன்படிக்கையின்படி இந்தியா ஒரு இடைமுக நாடாகவே தன்னை நிலைநிறுத்தியுள்து. தமிழ் மக்கள் பாதுகாப்பிற்காக தன்னை இந்த ஒப்பந்தத்தின் மூலம் முன்நிறுத்தியுள்ளது. என்றாலும், கடந்த 38 ஆண்டுகளாக அதனைச் செயல்பூர்வமாக அதுநிறைவேற்றவில்லைஎன்பதுவருத்தத்திற்குரியவிடயமாகும். இது இந்திய அரசியலில் இருந்து தமிழ் மக்கள் எதிர்பார்த்த நம்பிக்கையை பெரிதும் சிதைத்து. இந்த ஒப்பந்தத்தின் நடைமுறைப்படுத்தலை வலியுறுத்துவதற்கான முறையான முயற்சிகளை மேற்கொள்ளாமல், இந்தியா தற்போது அந்த ஒப்பந்தத்தை பிந்திய வரலாற்று ஆவணமாகவே பார்க்க முற்படுவதை தமிழர் மக்கள் பெரிதும் எதிர்க்கின்றனர்.**

**இதுபோன்ற பின்வாங்கும் நிலைப்பாடுகள், இலங்கை அரசுக்குச் சாதகமாகவே அமைந்துள்ளன. இலங்கையில் தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சிகளை வழங்கி பெரும் வன்முறைகளுக்கும் உயிர் மற்றும் உடமை இழப்புக்களுக்கும் காரண கர்த்தாவாக இருந்த இந்தியா, தமிழர்களுக்கு தீர்வைப் பெற்றுத் தரவேண்டிய தார்மீகப் பொறுப்பைக் கைவிட்டமை மன்னிக்கமுடியாத குற்றம். ஒப்புக்குச்சப்பாணியாகஅரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை இலங்கை முன்வைப்பதுடன் தனது கடமை முடிந்துவிடுவதாக இந்தியா நம்புவது தமிழர்களை முற்றிலும் ஏமாற்றி, அழிக்கும் உத்தியைக் கொண்டது என்றே நோக்கவேண்டியுள்ளது.**

**இந்திய – இலங்கை உடன்படிக்கையின்படி உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் தன் கண்முன்னாலேயே சிதைக்கப்பட்டு, அழிக்கப்படுவதையும் இந்தியா வேடிக்கை பார்த்துக்கொண்டே இருப்பதும் தமிழர்களுக்கு மேலும் கவலை தரும் விடயம்.**

**இந்தச் சூழ்நிலையில், இந்தியா தனது தார்மீகப் பொறுப்பை மீட்டெடுத்து, அரசியல் அழுத்தத்தை இலங்கை அரசுக்கு ஏற்படுத்த வேண்டியது அவசியம்.**

**இருநாட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 38 ஆண்டுகள் கடந்தாலும், அதன் ஆதார நோக்கங்கள் இன்னும் எந்த மாற்றமும் இன்றித் தொடர்கின்றன. தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியா, தன்னை ஒரு பெரிய சகோதர நாடாக வர்ணிக்க விரும்புகிறதானால், அதன் ஒப்பந்தப் பொறுப்புகளை நிறைவேற்றும் தார்மீக துணிவையும் கடமையையும் கொண்டிருக்க வேண்டியது முக்கியம். சமாதானமும், அரசியல் தீர்வும் ஒரே பாதையில் பயணிக்க முடியுமானால், இந்தியா அந்த பாதையின் முதல் ஒளியாக இயங்க வேண்டிய கட்டாயக் கடமையை உணரவேண்டும். இந்தப் பிராந்தியத்தின் நீடித்த அமைதிக்கு அது மிக முக்கியமானது.**

# இனிய பாரதியின் மற்றொரு சகாவும் தீவுச்சேனையில் வைத்துக் கைது

இனியபாரதியின் இன்னுமொரு சகாவும் நேற்று குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார். - வெலிகந்தை தீவுச்சேனையைச் சேர்ந்த - பாலிகிருஷ்ணன் சபாபதி மட்டக்களப்பு கிரானில் வைத்து மாலை 4.00 மணியளவில் கொழும்பில் இருந்து வந்த அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். .

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த இனிய பாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஒருங்கிணைப்பாளருமான புஷ்பகுமார் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளார். அவரது சகாக்களான சசீந்திரன், தவசீலன் ஆகியோரை ஜுூன் 28ஆம் திகதி திருக்கோவில் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் திருக்கோவில் மற்றும் மட்டு சந்திவெளி பகுதிகளில் வைத்து குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்திருந்தனர்.

இனியபாரதியிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் வெலிகந்தை தீவுச்சேனை வதைமுகாமில் இருந்து செயற்பட்டுவந்தவரும், இனியபாரதியின் சகாவும் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவருமான சபாபதியை கிரான் வைரவர் கோவில் வீதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து நேற்று மாலை 4.00 மணியளவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் சுற்றிவளைத்துக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரை கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இனிய பாரதியைக்கைது செய்து விசாரணை செய்ததன் பின்னர் இனியபாரதியின் முன்னாள் சாரதி செந்தூரன், அவரது சாகாவான சந்திவெளியைச் சேர்ந்த சசீந்திரன் தவசீலன் மற்றும் சகாவான திருக் கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த தொப்பி மனாப் என்றழைக்கப்படும் விக்கினேஸ்வரன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால் இனிய பாரதி மற்றும் பிள்ளையானுடன் தொடர்புபட்டவர்கள் பயப் பீதியில் இருந்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

# பிளாஸ்ரிக் கழிவு சேகரிக்கும் 30 கம்பிக்கூடுகள் அன்பளிப்பு

## யாழ். மாநகர சபைக்கு வழங்கியது ஹீல்ஸ் நிறுவனம்

யாழ்ப்பாணம் மாநகர சபைப் பகுதியில் பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரித்து அகற்றும் திட்டத்திற்காக 30 கழிவு சேகரிக்கும் கம்பிக் கூடுகள் ‘ஹீல்ஸ்’ வர்த்தக நிலையத்தால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நகர்ப் புறத்தில் தினமும் சேரும் அதிக குப்பைகளைத் தரம் பிரித்து இலகுவில் சேகரிக்கும் நோக்கில் இதற்கான ஏற்பாடுகள் மேற்கள்ளப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்குத் தேவையான 30 கூடுகளைக் ‘கீல்ஸ்‘ நிறுவனத்தினர் மாநகர முதல்வர் மதிவதனி மற்றும் ஆணையாளர் கிருஷ்ணேந்திரன் ஆகியோரிடம் கையளித்துள்ளனர்.

இவ்வாறு கையளிக்கப்பட்ட கூடுகள் முதல் கட்டமாக நல்லூர் கந்தன ஆலயச் சுற்றாடலில் வைக்கப்படும் என்றும் வருடாந்த மகோற்சவம் முடிந்த பின்னர் நகர்ப்புறங்களில் அதிகமாக பிளாஸ்ரிக் கழிவுகள் சேரும் இடங்களில் வைக்கப்படவுள்ளன.

# வளமான எதிர்கால பயணத்தில் அநுரவின் வருகை தீர்க்கமானது

## மாலைதீவு அரசத் தலைவர் தெரிவிப்பு

இலங்கைமாலைத்தீவு இராஜதந்திர உறவுகள் 60ஆவது ஆண்டு நிறைவை எட்டியுள்ள நிலையில் இலங்கை அரசுத் தலைவரின் மாலைதீவுக்கான பயணம், இரு நாடுகளினதும் பொருளாதார ரீதியாக ஒருங்கிணைந்த மற்றும் வளமான எதிர்காலத்தை நோக்கிய பயணத்தில் ஒரு தீர்க்கமான காரணியாக இருக்கும் என்று மாலைத்தீவு அரசுத் தலைவர் கலாநிதி முகமது முய்சு தெரிவித்தார்.

‘குரும்பா மோல்டீவ்ஸ்‘ விடுதியில் நேற்று (28) இரவு அரசுத் தலைவர் அநுர குமார திசாநாயக்கவுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இராப்போசன விருந்துபசாரத்தின் பின்னர் மாலைத்தீவு அரசுத் தலைவர் கலாநிதி முகமது முய்சு இதனைத் தெரிவித்தார்.

மாலைத்தீவு - இலங்கை உறவுகளின் பொருளாதார முக்கியத்துவத்தை எடுத்துரைத்த மாலைதீவு அரசுத் தலைவர், பிராந்தியத்தில் செழிப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை கட்டியெழுப்ப இலங்கையுடன் இன்னும் நெருக்கமாக பணியாற்ற ஆவலுடன் இருப்பதாகக் கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று முக்கியமான உறவுகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக தெரிவித்த அவர், தற்போது கருவாடு போன்ற பாரம்பரிய வர்த்தகப் பரிமாற்றங்களுக்கு அப்பால் சுற்றுலா, டிஜிட்டல் தொழில்நுட்பம், பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் கலாச்சார பரிமாற்றங்கள் போன்ற நவீன துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவடைந்துள்ளன என்றும் தெரிவித்தார். இந்த பன்முகப்படுத்தல், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் எதிர்காலத் தன்மையை மட்டுமல்லாமல், வேகமாக மாறிவரும் உலகின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான இரு நாடுகளின் பொதுவான விருப்பத்தையும் பிரதிபலிக்கிறது என்று அரசுத் தலைவர் முய்சு மேலும் சுட்டிக்காட்டினார்.

கல்வி, சுகாதாரம் மற்றும் மனிதவள அபிவிருத்தி போன்ற முக்கிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால ஒத்துழைப்பை நினைவு கூர்ந்த மாலைதீவு அரசுத் தலைவர், இந்த ஒத்துழைப்பு தற்போதைய பொருளாதார விரிவாக்கத்திற்கு ஒரு உறுதியான அடித்தளத்தை அமைக்கிறது என்று சுட்டிக்காட்டினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான அண்மைய உயர்மட்ட கலந்துரையாடல்கள் இது வரை பயன்படுத்தப்படாத புதிய பொருளாதார மூலங்கள் குறித்து ஆராய்ந்து இரு நாட்டு மக்களுக்கும் பொருளாதார வாய்ப்புகளை விரிவுபடுத்தும் என்றும் அரசுத் தலைவர் முய்சு நம்பிக்கை தெரிவித்தார்.

பல தலைமுறைகளாக, மாலைத்தீவு மக்கள் இலங்கையை ஒரு பங்காளராக மட்டுமல்லாமல் இரண்டாவது வீடாகவும் கருதி வருவதாகக் கூறிய அவர், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் வலுவான தனிப்பட்ட மற்றும் நிறுவன ரீதியிலான உறவுகளை அடிப்படையாகக் கொண்டவை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த உறவு ரீதியான உணர்வு இரு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரு தனித்துவமான சாதக நிலைமையை உருவாக்குகிறது என்று மாலைத்தீவு அரசுத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மாகாண சபைத் தேர்தல் முறைமையை நாடாளுமன்றமே தீர்மானிக்க முடியும்

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

மாகாண சபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறையில் நடத்துவது என்ற சட்டச் சிக்கலுக்கு நாடாளுமன்றத்தின் ஊடாகவே தீர்வு காண முடியும். தேர்தல் முறைமை எது என்பதைத் தீர்மானித்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்தத் தயாராகவே உள்ளோம் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து வினவிய போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 10 மாத காலப் பகுதியில் 3 தேர்தல்களை நடத்தி முடித்துள்ளோம். உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய உள்ளூராட்சிமன்றத் தேர்தலை சிறந்த முறையில் நடத்தினோம். தற்போது உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகள் இயங்குவது ஜனநாயகத்துக்கு விரோதமானது.மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் தேர்தல்கள் ஆணைக்குழு உறுதியாகவுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் குறித்து உயர் நீதிமன்றம் கடந்த காலங்களில் பல வியாக்கியானங்களை முன்வைத்துள்ளது. மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையில் நடத்துவதா அல்லது புதிய தேர்தல் முறையிலா நடத்துவது என்பதில் பெரும் சட்டச் சிக்கல்கள் காணப்படுகிறது.

தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கலுக்குதீர்வுகாண்பதுதொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழுக்கள் பலவற்றுக்கு யோசனைகளை முன்வைத்துள்ளோம்.

மாகாண சபைத் தேர்தலை எந்த தேர்தல் முறையில் நடத்துவது என்ற சட்டச் சிக்கலுக்கு நாடாளுமன்றத்தின் ஊடாகவே தீர்வு காண முடியும். தேர்தல் முறைமையை சிறந்த முறையில் தீர்மானித்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்த தயாராகவே உள்ளோம். ஆகவே சட்ட சிக்கலுக்குத் தீர்வு காணும் பொறுப்பு சகல அரசியல் கட்சிகளுக்கும் உண்டு

தேர்தல் தினத்தன்று கடமைகளில் ஈடுபடும் ஊடகவியலாளர்கள், மற்றும் ஏனைய தரப்பினர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கு அனுமதியளிக்க வேண்டுமாயின் சட்டத்திருத்தம் செய்ய வேண்டும். நாடாளுமன்றம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

# பொரளை விபத்துக்குக் காரணமான கனரக வாகனச் சாரதிக்கு மறியல்

கொழும்பு பொரளை பொது மயான சுற்றுவட்டப் பகுதியில் திங்கட்கிழமை இடம்பெற்ற வாகன விபத்துடன் தொடர்புடைய பாரந்தூக்கி கனரக வாகனத்தின் சாரதி விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று கொழும்பு போக்குவரத்து பிரிவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவரை ஓகஸ்ட் 7 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் இதன்போது உத்தரவு பிறப்பித்தார்.

இதனிடையே கைது செய்யப்பட்ட குறித்த பாரந்தூக்கி கனரக வாகனத்தின் உரிமையாளரை பிணையில் விடுவிக்க நீதவான் உத்தரவு பிறப்பித்தார். இதற்கமைய அவரை 5 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப்பிணைகளில் விடுவிக்க நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

பௌத்தாலோக்க மாவத்தை ஊடாக பொரளை பொது மயான சுற்றுவட்ட பகுதியை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான பாராதூக்கி கனரக வாகனமொன்று

வேகக்கட்டுப்பாட்டை இழந்து நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில்சுற்றுவட்டபகுதியில்மின்சமிக்ஞைக்குஅருகாமையில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களுடன் மோதி விபத்துக்குள்ளாகி இருந்தது.

இதன்போது குறித்த வாகனம் அங்கிருந்த 6 மோட்டார் சைக்கிள்களுடனும் 3 கார்களுடன் மோதியிருந்தது.

மேலும்விபத்தில்இருபெண்கள்உள்ளிட்ட8பேர்காயமடைந்தனர். அவர்களில்மோட்டார்சைக்கிள் ஒன்றின் ஓட்டுநர் உயிரிழந்திருந்தார்.

62 வயதுடைய அதுருகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே சம்பவத்தின் போது உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

பாராந்தூக்கியின் சாரதி பொரளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். குறித்த வாகனத்தின் சாரதியின் கவனயீனம் மற்றும் பாதுகாப்பற்ற முறையில் வாகனம் செலுத்தியமையே விபத்துக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் சந்தேக நபர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த போது அவர் ஒரு வகை கஞ்சாவை பயன்படுத்தியிருந்தார் என்று கண்டறியப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இதற்கமைய சந்தேகநபர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.










காலைக்கதிர் Kalaikkathir

### இலங்கையர்களுக்கு

# தென்கொரியாவில் அதிக வேலைவாய்ப்பு

ஆளும்தரப்பு இலங்கைத் தொழிலாளர் சமூகத்துக்கு அதிகப்படியான சம்பளம் மற்றும் ஆரோக்கியமான தொழிலைப் பெற்றுக்கொடுப்பதற்காக மேற்கொண்டுவரும் வேலைத் திட்டத்துக்கு இணக்கம் தெரிவித்து தென்கொரியாவில் அதிகமான தொழில் வாய்ப்புக்கள் தற்போது கிடைத்து வருகின்றன என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம் அந்த நாட்டின் பருவகால தொழில் குழுவின் (ஈ8) கீழான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு கொரியாவின் பொசொங் உள்ளூராட்சி நிறுவனத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடல் வெற்றியடைந்துள்ளதுடன் அதுதொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்தினால் அதுதொடர்பான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக இலங்கை தொழிலாளர்களுக்கு பருவகால தொழில் திட்டத்தின் கீழ், அதிகபட்ச 8 மாதங்கள் வரை பொசாங் மாகாணத்தில் விவசாய கிராமங்களில் பணியாற்றுவதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

கொரிய அரசாங்கத்தின் ஈ8 விசா குழுவின் கீழ் இலங்கை தொழிலாளர்களை பணியமர்த்துவதை இலகுபடுத்துவதற்கான ஒரு முன்னோடி திட்டமாக செயற்படுத்துவதற்கும் அதற்காக ஆர்வம் காட்டுகின்ற உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடுவதற்காக அமைச்சர் விஜித்த ஹேரத்தினால் கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி மற்றும் இந்த மாதம் 1ஆம் திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்த அமைச்சரவை பத்திரத்துக்கு அனுமதி கிடைத்துள்ளது.

இதேவேளை, இதற்கு முன்னர் தென்கொரியாவில் யொன்ங்வோல் மாகாணத்துடன் கடற்றொழில் மற்றும் விவசாய துறைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றது. அதன் பிரகாரம் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாக பணியகம் தெரிவித்துள்ளது.

தொழிலாளர்களை இணைத்துக்கொள்ளும் முறை மற்றும் அதற்கு தேவையான வசதிகள் தொடர்பில் மக்களுக்கு தகவல்கள் வழங்கப்படும் என்பதுடன் அதுவரை அரசாங்கத்தின் உத்தியோபூர்வ அறிவிப்புகளுக்கு மாத்திரம் கவனம் செலுத்துமாறும் பணியகம் தெரிவித்துள்ளது. பல்வேறு பிரசாரங்களை மேற்கொண்டு தொழில் எதிர்பார்ப்புடன் இருப்பவர்களை ஏமாற்றி, நிதி மோசடி செய்யும் நபர்களிடம் சிக்கிக்கொள்ள வேண்டாம் எனவும் பணியகம் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

# வாள்வெட்டில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டில் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய் வீதி, கட்டுடை பகுதியில் இடம்பெற்றுள்ளது

பாதிக்கப்பட்ட நபர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தவேளை பின்னால் ஓட்டோவில் வந்த மூவர் அவரைக் கீழே தள்ளி வீழ்த்திவிட்டு வாளால் வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

வீதியில் சென்றவர்கள் அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். ஊரெழு பகுதியைச் சேர்ந்த நபரே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மினி பஸ் - ஹையஸ் மோதி கோப்பாயில் 15 பேர் காயம்

தனியார் மினி பஸ்ஸூம் ஹையஸ் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் தனியார் பஸ் சாரதியும், 15 வரையான மேற்பட்ட பயணிகளும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் கோப்பாய் பகுதியில் இடம்பெற்றது.

அச்சுவேலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிகளுடன் வந்த தனியார் பஸ்ஸூம் யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று ஹயஸ் வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின.

விபத்தைத் தவிர்க்கத் தனியார் பஸ் சாரதி முயற்சி மேற்கொண்ட போதிலும் விபத்து இடம்பெற்றுள்ளது. தனியார் பஸ் அருகில் உள்ள சங்கக் கடை வாசலுடன் சென்று நின்றது. காயமடைந்தவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.07.2025இல் வெளியிடப்பெற்றது